# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● ஜூன் 13, 2022 Weekly E-paper ● June 11, 2022


# பேரவையின் தலைமைக் குழுத் தீர்மானங்கள்!



## மதுரை ஆதினத்திற்கு வன்மையான கண்டனம்

இராம.வைரமுத்து

## வெறுப்பரசியலால் வந்த வினை

சாரதாதேவி

## மக்கள் கழுத்தை மிதிக்கும் சனாதனம்!

மா.உதயகுமார்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● ஜூன் 13, 2022 Weekly E-paper ● June 11, 2022


# பேரவையின் தலைமைக் குழுத் தீர்மானங்கள்!

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தலைமைச் செயற்குழுக் கூட்டம் 11- 05 - 2022 சனிக்கிழமை காலை 10 மணி அளவில் சென்னை கோடம்பாக்கத்தில் உள்ள பேரவைத் தலைமை அலுவலகத்தில், பேரவைத் துணை அவைத் தலைவர் பொள்ளாச்சி மா.உமாபதி தலைமையில், பேரவைப் பொதுச் செயலாளர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பேரவைத் துணை அவைத்தலைவர் அ.இல.சிந்தா, பொருளாளர் எழில்.இளங்கோவன், துணைப் பொதுச் செயலாளர்கள் சிங்கராயர், சிற்பி செல்வராசன், முதன்மைச் செயலாளர் புலேந்திரன், அமைப்புச் செயலாளர் காசு.நாகராசன், கொள்கை பரப்புச் செயலாளர் இரா.உமா, மாநில மகளிர் அணிச் செயலாளர் தோழர் மகாலட்சுமி, கருஞ்சட்டைப் பதிப்பக இயக்குனர் ‘பெல்’ ராசன், நிதித்துறைப் பொறுப்பாளர் செல்வின் சவுந்தரராசன், தலைமை நிலையச் செயலாளர் எட்வின், கல்வி அறக்கட்டளை இயக்குனர் லாரன்ஸ், தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் உதயகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தோழர்கள் முத்தையா குமரன், மாறன், பேராசிரியர் சாமி, திராவிட மங்கை, சென்னை மாவட்டத் தலைவர் கார்த்திக், செயலாளர் திராவிடமணி, திராவிட நட்புக் கழக மண்டலப் பொறுப்பாளர்கள் விஜயராணி, இளஞ்சித்திரன், முத்துராசு, குமரி மாவட்டப் பொறுப்பாளர்கள் ஆனந்த் விஷ்ணு ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தலைமைக் குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

- *தீர்மானம் 1: பேரவையின் துணை அமைப்பான திராவிட நட்புக் கழகத்தை வழிநடத்திச் செல்ல பேரவையின் மூத்த உறுப்பினர்கள் பொள்ளாச்சி மா.உமாபதி, ஆ.சிங்கராயர், திராவிட மங்கை ஆகியோர் நியமிக்கப்படுகின்றனர்.*
- *தீர்மானம் 2: திராவிட நட்புக் கழகத்தின் அமைப்புக் கூட்டங்களை மண்டல வாரியாக, காணொளி வழியாக நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.*
- *தீர்மானம் 3: இந்தியாவைத் தலைகுனிய வைத்த பாஜகவின் நூபுர் சர்மாவைக் கண்டித்துக் கண்டனக் கூட்டம் திராவிட நட்புக் கழகம் சார்பாக சிலநாள்களில் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.*
- *தீர்மானம் 4: கருஞ்சட்டைப் பதிப்பகத்தைத் திராவிடத் தமிழர் அறக்கட்டளையில் இருந்து தனியாகப் பிரித்துத் தனி வங்கிக் கணக்கு தொடங்குவது எனவும், அந்தத் தனிக் கணக்குகளைக் கருஞ்சட்டைப் பதிப்பக இயக்குனர் பெல் ராசன் அவர்களும், நிதித்துறை பொறுப்பாளர் செல்வின் சவுந்தரராசன் அவர்களும் இணைந்து நிர்வகிப்பார்கள் எனவும் முடிவு செய்யப்பட்டது.*

## பேரவையில் திருவாரூர் தோழர்கள் இணைந்தார்கள்



திராவிட இயக்கத் தமிழர் பேரவையில் திருவாரூர் மாவட்டத் தோழர்கள், தோழர் மறைக்காயர் தலைமையில், பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன் முன்னிலையில் இணைந்தார்கள்.

# “வரம்பு மீறும் மதுரை ஆதினத்திற்கு வன்மையான கண்டனம்”

● இராம.வைரமுத்து

மதுரை ஆதின மடத்தின் 293ஆவது ஆதினமாக ஹரிஹர தேசிகர் 23.08.2021 அன்று பொறுப்பேற்றது முதல் தொடர்ந்து சர்ச்சையான கருத்துகளைப் பேசி வருகிறார். அத்துடன் ஆன்மிகவாதிகளுக்கான வரம்பை மீறி அரசியல்வாதியைப் போன்று அவர் செயல்படுவது வன்மையான கண்டனத்திற்குரியது.

செக்கிழுத்தச் செம்மல் வ.உ.சிதம்பரனார் அவர்களை ஒரு சாதிக்கான தலைவர் போன்று அவர் பேசி, அதற்குப் பெரிய எதிர்ப்புக் கிளம்பியவுடன் அக்கருத்தைத் திரும்பப் பெற்றார்.

தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில் தமிழ்ப்புத்தாண்டு தையா சித்திரையா என்ற வினா அவர் முன் வைக்கப்பட்ட போது, அதற்கு சரியான விடையைக் கூறாமல் புத்தாண்டை எப்போது கொண்டாடினால் என்ன என்று இலங்கைப் பிரச்சனையைக் கூறி மழுப்பினார். அவர் சைவர் என்பதால் வைணவப் பிண்ணனி கொண்ட சித்திரையை அவர் ஏற்க மறுத்தே இப்படித் திசை திருப்பினார் என்ற உண்மை உற்று நோக்கினால் விளங்கும்.

அதே போல் இன்னொரு தொலைக்காட்சி நேர்காணலில் பெண்கள் அர்ச்சகர் ஆகலாமா என்ற கேள்விக்கு அவர் அளித்த பதில் பெண்களைப் பெருத்த அவமானத்திற்கு ஆளாக்கியது.



இந்து சமய அறநிலையத்துறையின் செயல்பாடுகள் மற்றும் அத்துறையின் அமைச்சர் மாண்புமிகு பி. கே. சேகர்பாபு அவர்கள் குறித்து அவர் கேலியும் கிண்டலுமாக பேசி வருவது ஆன்மீகவாதிக்கு அழகல்ல. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசையும், அதன் பிரதிநிதியாக உள்ள அமைச்சரையும் மனம் போன போக்கில் மதுரை ஆதினம் பேசி வருவது வெட்கக்கேடானது.

திராவிடம் எங்கே இருக்கிறது என்று கேட்கும் மதுரை ஆதினம், அவர் இருக்கும் மடத்தை சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கியவர் “திராவிட சிசு” என்று அழைக்கப்பட்ட திருஞானசம்பந்தர் என்பதை இதைப் படித்த பிறகாவது உணர்வாரா?

ஓரிரு நாட்களுக்கு முன்பு மதுரையில் விஸ்வ ஹிந்து பரிசத் நடத்திய துறவியர் மாநாட்டில் அவர் ஆற்றிய உரையில் திராவிட இயக்கத்தின் மீது வெறுப்பை வெளிக்காட்டி இருக்கிறார். பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், தளபதி மு.க.ஸ்டாலின் குறித்து அவர் கூறிய கருத்துகள் வெறுப்புணர்வின் உச்சம். சுயவிருப்பு வெறுப்பைத் துறந்தவர்கள்தான் துறவியாக இருக்க இயலும் என்று சொல்வார்கள். அப்படிப் பார்த்தால் இவர் துறவியாக அல்ல மனிதராகவே மதிக்கத் தகுதியற்றவர் என்பதை இவரது தொடர் செயல்பாடுகள் உணர்த்துகின்றன.

கற்றறிருந்த பெருமகன்கள் தாங்கள் படித்த கருத்துகளில் சிறந்த கருத்துகளை மேற்கோள் காட்டுவது இயல்பு. அதை வைத்துத் திருமூலரின் கருத்தைப் பேரறிஞர் அண்ணா திருடி விட்டதாகக் கூறும் இவரது நயவஞ்சகத்தைக் கண்டு நமக்கெல்லாம் உள்ளம் கொதிக்கிறது.

அந்த உரையில் அவர் பிரதமர் மோடியைப் பாராட்டுவதிலும், சீமானை அன்புச் சகோதரர் என்று அழைப்பதிலும் இருந்து அவர் யாருடைய ஊதுகுழல் என்பது தெரிந்து விட்டது. தமிழ்நாட்டில் எப்படியாவது மதக் கலவரத்தை உண்டாக்கி அதன் மூலம் இந்துத்துவாவை இந்த மண்ணில் வேரூன்றச் செய்து விட வேண்டும் என்ற பா.ஜ.கவின் பசப்பு வேலைக்குப் பலியாகி இருக்கிற மதுரை ஆதினம் இனியாவது தன்னைத் திருத்திக் கொள்ள வேண்டும். இல்லையெனில் முன்பு நித்தியானந்தா நியமனத்தின் போது 292வது மதுரை ஆதினகர்த்தருக்கு எதிராக “ஆதின மீட்புக் குழு” உருவானதைப் போல மதுரையில் மீண்டும் ஒரு மக்கள் எழுச்சி பிறக்கும். மதுரை ஆதினத்திற்கு மக்கள் பாடம் புகட்டுவார்கள் ! ●

# வெறுப்பரசியலால் வந்தவினை !

**சாரதாதேவி**

கடந்த மே மாதம் 26ஆம் நாள் “டைம்ஸ் நவ்” என்ற தொலைக்காட்சி, நுபுர் ஷர்மா என்ற பா.ஜ.க.வின் செய்தித் தொடர்பாளரை, கியான்வாபி மசூதியில் இருப்பதாகப் புரளி கிளப்பிவிடப்பட்டிருக்கும் சிவலிங்கத்தைப் பற்றி பேச அழைத்திருக்கிறார்கள். நவிகா குமார் என்ற அந்த நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் இது போன்று இந்துத்துவத் தலைவர்களுக்கு ஒரு ஊடக வெளி உருவாக்கி நச்சுக் கருத்துகளைத் தொடர்ந்து பரப்பி வருவதாகவே தெரிகிறது.



அந்த நிகழ்ச்சியில் நுபுர்ஷர்மா, குரான் சொல்வதாக முகமது நபி அவர்களின் திருமணம் பற்றிய செய்தியை வாசிக்கிறார். 6 வயது கொண்ட ஆயிஷா என்ற பெண்ணை 39 வயது கொண்ட முகமது அவர்கள் திருமணம் செய்துகொண்டார் என்று சொல்லி அவருடைய செயல் பலாத்காரம் ஆகாதா என்ற தொனியில் நாகரிகமற்ற சொற்களைப் பயன்படுத்தி உள்ளார்.



நபிகள் நாயகத்தை அவமதித்ததாக அவர் மீது உடனடியாக இசுலாமிய மத நிறுவனங்கள் புகார் அளித்தனர்.

வளைகுடா நாடுகளில் சுற்றுலா மேற்கொண்டிருந்த இந்திய நாட்டின் துணை ஜனாதிபதி திரு.வெங்கையா நாயுடு அவர்கள் ஜூன் 4ஆம் நாள் கட்டார் நாட்டுக்கு பயணம் செய்திருந்த நிலையில், இந்தியத் தூதரை அழைத்து ஒரு (கண்டனக்) கடிதத்தை அளித்தனர். அதில், உலகில் இருக்கும் 200 கோடி இசுலாமியர்களை அவமதித்த கருத்துக்கு வருத்தமும், இந்தியாவிடம் இருந்து நபிகள் குறித்த கருத்துக்கு மன்னிப்பும் கோரியிருந்தனர். துணை ஜனாதிபதி அங்கு இருக்கையில் அவர்கள் எடுத்த இந்த நடவடிக்கையானது விரைவில் காட்டுத் தீ போல பற்றியது. குவைத், இரான், எகிப்து, சவுதி, ஓமன், பாகிஸ்தான், இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகளும், இசுலாமிய ஒத்துழைப்புக் கூட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு தரப்புகளிலிருந்தும் கண்டனங்கள் குவிந்தன. இந்தியப் பொருட்களை சந்தையிலிருந்து அப்புறப்படுத்தவும், இசுலாம் வெறுப்புடன் கூடிய இந்தியத் தொழிலாளர்களை அடையாளம் கண்டு பணி நீக்கம் செய்யவும் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன.

அடுத்த நாள் ஜூன் 5 அன்று, பாரதிய ஜனதா கட்சி தன் வெறுப்பு அரசியலுக்கு தயார் செய்து வைத்த முக்கிய இரு செய்தித் தொடர்பாளர்களான நுபுர் ஷர்மாவையும், நவீன் குமார் ஜிண்டாலையும் கட்சியின் அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் நீக்கியது. இந்தியா எல்லா மதங்களையும் மதிக்கிறது என்றும் அறிக்கை விட்டது. வளைகுடா நாடுகளின் கண்டனங்கள் குறைந்தபாடில்லை. இப்போது இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் அவர்கள் இந்தியாவின் மரியாதையை மீட்கப் போராடிக்கொண்டிருக்கிறார்!

நம்முடைய கவலையெல்லாம் இது போன்று ஒரு திருப்புமுனையிலாவது நம் மண்ணில் வாழும் இசுலாமியச் சகோதர மக்களின் வாழ்வும் மாண்பும் இந்துத்துவ பயங்கரவாதிகளிடமிருந்து மீண்டுவிடாதா என்பதுதான். ●

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## இந் 'தீ ' என்றும் ஆபத்து!

அண்மையில் ஆந்திர முன்னாள் முதல்வர், காலம் சென்ற என்.டி.ராமாராவின் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட நீதிபதி என்.வி.ரமணா, தாய் மொழியின் உரிமைகளைப் பெறுவதில் தமிழர்களைப் போல போராட வேண்டும் என்று பேசியிருக்கிறார்.

இது காலம் கருதிய பேச்சாகவும், பேசியவர் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி என்பதும் கவனத்திற்கு உரியது.

புதிய தேசியக் கல்விக் கொள்கைக்கான கஸ்தூரி ரங்கன் வரைவு அறிக்கை, இந்தி கட்டாய மொழியாகக் கற்பிக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறது.

இதற்குத் தமிழ் நாடு தொடங்கி எழுந்த வலிமையான எதிர்ப்பினால் மனிதவள மேம்பாட்டுத்துறை அறிக்கையில் சிறு மாறுதல் செய்வதாகக் கூறி, இந்தி கட்டாயம் என்பதற்குப் பதில் மூன்றாவது ஒரு மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறியிருக்கிறது.

இந்த மும்மொழித் திட்டத்தின் மூலம் இந்தி மறைமுகமாகத் திணிக்கப்படுவதை அமித்ஷா தெளிவாகச் சொல்கிறார்.

நாடாளுமன்ற அலுவல் மொழிக்குழுவின் 37 ஆம் கூட்டத்தில் பேசும் போது மாநில மொழிகளுக்கு மாற்றாக அல்ல, ஆங்கில மொழிக்கு மாற்றாக இந்தியை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பேசியிருக்கிறார், அமித்ஷா.

ஒரே நாடு, ஒரே கலாசாரம், ஒரே தேர்தல் என்ற வடிவில் ஒரே மொழி சமஸ்கிருதத்தை இந்திய ஒன்றியத்தில் கொண்டுவரத் துடிக்கிறது ஆர்.எஸ்.எஸ். பின்புலம் கொண்ட பி.ஜே.பி. அரசு.

இலக்கிய, இலக்கண, மொழிவளம் இல்லாத, வழக்கொழிந்து போன அம்மொழியை நேரடியாக அரியணை ஏற்ற முடியாது என்பதனால் முதலில் இந்தியைத் திணிக்க முயல்கிறார்கள். அதன் வழியாக சமஸ்கிருதத்தை ஒரே ஆட்சி மொழியாக ஆக்கிவிட வேண்டும் என்ற பார்ப்பனிய சூழ்ச்சிதான் மும்மொழிக் கொள்கையில் அடங்கியிருக்கிறது.

இப்படிப்பட்ட காலத்தில், நேரத்தில் தாய்மொழியைக் காப்பாற்றத் தமிழர்களை அடையாளம் காட்டும் நீதிபதி ரமணா அவர்களின் பேச்சை ஒதுக்கிவிட முடியாது. அதை ஓர் எச்சரிக்கையாகக் கூட எடுத்துக் கொள்ளலாம். தமிழ்நாட்டு மக்கள் என்றும் இரு மொழிக் கொள்கையில் நின்று, இந்தியை எதிர்ப்பதில் உறுதியாக இருப்பவர்கள் என்பதைக் கடந்த கால இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் உறுதி செய்துள்ளன.

தமிழர்கள் இனியும் உறுதியாகவே இருப்பார்கள்!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120. என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,

தொலைபேசி: 044-2472 6408



05-06-2022 அன்று திராவிடத் தமிழர் அறக்கட்டளை சார்பாக, திருப்பூர் மாவட்டம் சந்திரமேகலாவின் பள்ளி இறுதி ஆண்டுக்கான கல்வி நிதி உதவித் தொகையைத் துணைப் பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ் அவர்கள் வழங்கினார்.



திராவிடத் தமிழர் அறக்கட்டளை சார்பாக 05-06-2022 அன்று திருப்பூர் மாவட்டம் சவுந்தர்யாவின் கல்லூரி முதலாம் ஆண்டுக்கான கல்வி நிதி உதவியைத் துணைப் பொதுச் செயலாளர் வழங்கினார்.



திராவிடத் தமிழர் அறக்கட்டளையின் கல்வி உதவித் திட்டத்தின் கீழ், திண்டுக்கல் தீபிகாவுக்கு பள்ளி இறுதி ஆண்டுக்கான நிதியை அவரின் தந்தையிடம் பேரவையின் முதன்மைச் செயலாளர் புலேந்திரன் 06-06-2022 அன்று வழங்கினார்.



திராவிடத் தமிழர் அறக்கட்டளையின் கல்வி உதவித் திட்டத்தின் கீழ், திண்டுக்கல் சித்தார்த்துக்கு, அவரின் கல்லூரி முதலாம் ஆண்டுக்கான நிதியைப் பேரவையின் முதன்மைச் செயலாளர் புலேந்திரன் 06-06-2022 அன்று வழங்கினார்.

# மக்கள் கழுத்தை மிதிக்கும் சனாதனம்!

மா.உதயகுமார்



சென்னையில் நடைபெற்ற விழா ஒன்றில் கலந்துகொண்டு பேசிய தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, “வேற்றுமையில் ஒற்றுமை என நாட்டைப் பற்றி கூறுகிறோம். சனாதன தர்மமும் அதையேதான் கூறுகிறது. இந்தியாவில் ராணுவம், பொருளாதாரம் வளர்ச்சி அடைவதைப்போல ஆன்மீகத்திலும் வளர்ச்சி அவசியம். ஆன்மீகத்தில் வளர்ச்சி இந்தியாவின் வளர்ச்சியாக அமையும்” என்று பேசி இருக்கிறார்.



நாம் அவர் ஆளுநராகப் பணியாற்றுவார் என்று எதிர்பார்க்கிறோம். ஆனால் அவரோ ஆர்.எஸ்.எஸ் பிரச்சாரகராக மட்டுமே பணியாற்றிக் கொண்டிருக்கிறார். சனாதன தர்மம், ஆன்மீக வளர்ச்சி என்று அவர் குறிப்பதெல்லாம் வன்முறையைத்தான் என்பதையும் அவரே அதே பேச்சின் மூலம் நிலைநாட்டியிருக்கிறார்.

“சோமநாதர் கோவில் சொத்துகளை அழித்து கந்தகார், பெஷாவர் நகரங்களை கஜினி முகமது உருவாக்கினார். அந்த நகரங்கள் அமெரிக்க குண்டுகளால் தகர்க்கப்பட்டதில் இருந்து சனாதன தர்மத்தின் வலிமையை அறியலாம். ரிஷிகளாலும் முனிவர்களாலும் சனாதன தர்மத்தின் ஒளியினாலும் இந்த நாடு உருவாக்கப்பட்டது” என்றும் பேசி இருக்கிறார் ஆளுநர்.

சனாதன தர்மத்தின் வலிமையால்தான் கந்தகார், பெஷாவர் நகரங்கள் அமெரிக்க குண்டுகளால் தகர்க்கப்பட்டன என்றால், எதன் வலிமையால் அன்று சோமநாதர் கோவில் சொத்துகள் அழிக்கப்பட்டன? சனாதன தர்மம் அன்று என்ன செய்துகொண்டிருந்தது. சனாதன தர்மம் அன்று வலிமையற்று இருந்ததா? அல்லது சனாதன தர்மம் கோமாவில் இருந்ததா?

வன்முறைகளை நியாயப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், இங்கு சிறுபான்மையினராய் இருக்கும் இஸ்லாமியர்களைக் குறிவைத்து மனித உரிமைகளுக்கு எதிரான சனாதன தர்மத்தை முன்னெடுக்கிறார்கள்.

சாதிக்கொரு நீதி சொல்வதும் பார்ப்பனர் நலனுக்காகவும் உண்டாக்கப்பட்டிருக்கும் சனாதன தர்மத்தை அழித்தொழிக்கவே பெரியாரும் அம்பேத்கரும் இன்னும் பலரும் பாடுபட்டிருக்கின்றனர். ஆனால் ஆர்.எஸ்.எஸ் இன்று முன்னெடுக்கும் விவேகானந்தர், இந்த சனாதன தர்மத்தைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறார் என்று பார்க்கலாம்.

“Whatever the rascally and wily priests teach them (that is , people) all sorts of mummery and tomfoolery as the very gist of the vedas and Hinduism – (mind you, neither these rascals of priests nor their forefathers have so much as seen a volume of the vedas for the last 400 generations) – they follow and degrade themselves. Lord help them from the rakshasas in the shape of the Brahmins of the kaliyuga” (Vivekananda: The Complete Works, Volume 8, Page 290, Calcutta, 1971)

“துர்த்தர்களும் ஏமாற்றுக்காரர்களும் ஆகிய புரோகிதர்கள் எல்லா வகையான மூட நம்பிக்கைகளையும் வேதம் மற்றும் இந்து மதத்தின் சாரம் என்று மக்களுக்குக் கற்பிக்கிறார்கள். இந்தப் போக்கிரித்தனம் மிக்க புரோகிதர்களும் அவர்களுடைய முன்னோர்களும் கடந்த நாநூறு தலைமுறைகளாக வேதத்தின் ஒரு பகுதியைக் கூட பார்த்ததில்லை. மூடத்தனமிக்க ஆச்சாரங்களைக் கடைப்பிடித்து அவர்கள் தம்மைத்தாமே இழி நிலைக்குக் கொண்டு வந்துவிட்டார்கள். கலியுகத்தில் பார்ப்பனர்கள் வடிவில் இருக்கும் ராட்சசர்களிடம் இருந்து மக்களையும் இந்நாட்டையும் அந்த தெய்வம்தான் காப்பாற்ற வேண்டும்.”

இந்த வரிகளைச் சொல்லியிருப்பது ஆங்கிலேயர்களோ, இஸ்லாமியர்களோ, அல்லது தந்தை பெரியாரோ, அண்ணல் அம்பேத்கரோ அல்ல. இந்து மதத்தின் அடையாளமாக, இளைய பாரதம் – இளைஞர்களுக்கான முன்மாதிரி என்று சங்பரிவாரம் பரப்புரை செய்யும் விவேகானந்தர் சொன்ன வரிகள். இன்னும் அழுத்தமாக சனாதன தர்மம பற்றியும், ரிஷிகள் முனிவர்கள் பற்றியும் விவேகானந்தர் இவ்வாறு கூறுகிறார்.

“The Smritis and the Puranas are productions of men of limited intelligence and are full of fallacies, errors, and the feelings of class and malice.”

Vivekananda: The Complete Works, Volume 6, Page 393

அதாவது ஸ்மிருதிகளும் புராணங்களும் குறுகிய சிந்தனைகள் கொண்ட மனிதரகளால் உருவாக்கப்பட்டவை. அவற்றில் முழுதும் தவறானவைகளும், சாதிப்பெருமைகளும், காழ்ப்புணர்ச்சிகளுமே இடம்பெற்றிருக்கின்றன என்று விவேகானந்தர் கூறுகிறார். “ரிஷிகளாலும் முனிவர்களாலும் சனாதன தர்மத்தின் ஒளியினாலும் இந்த நாடு உருவாக்கப்பட்டது” என்று ஆளுநர் சொன்னவர்களைப் பற்றிதான் விவேகானந்தர் மேற்கண்டவாறு சொல்லியிருக்கிறார்.




இன்னும் ஒரு படி மேலே போய் மிகவும் வெளிப்படையாக, “உலகில் உள்ள எந்த ஒரு மதமும் இந்து மதத்தைப் போன்று ஏழைகள் மற்றும் கீழ் மட்டத்தவர்களின் கழுத்தைப் போட்டு மிதிப்பதில்லை.” (“No religion on earth treads upon the necks of the poor and the low in such a fashion as the Hinduism.” – Vivekananda: The Complete Works, Volume 1, Page 502) என்று சொல்லியிருக்கிறார்.

மக்கள் கழுத்தைப் போட்டு மிதிக்கும் சனாதனத்தை வேரோடு அழிக்க பார்ப்பனரல்லாதோர் ஒன்றிணைய வேண்டும். ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian